# பாரதி கலைக் கழகம்

சைதாப்பேட்டை, சென்னை-15.

## 20-ம் ஆண்டு விழா 14-2-7[illegible]



## — கவிமலர் —

வெளியிடுவோர் :

**மாண்புமிகு திரு. எம்.எம். இஸ்மாயில்**

சென்னை உயர்நீதிமன்ற நடுவர்



சுருதிப் பொருளே வருக

துணிவே, கனலே, வருக!

கருதிக் கருதிக் கவலைப்படுவார்

கவலைக் கடலைக் கடியும் வடிவேல்

முருகா!

முருகா!!

முருகா!!!

பாரதி கலைக் கழகம் பல்லாண்டு வாழ்க!

**ஓர் அன்பர்**

Advt.

# தோன்றுக புதுயுகம்

கவிஞர்- சிவயோகி சித்தானந்தர்

ஊன்றிய விதையில் — உள்
உணர்வில் ஆவியில்
மீன்றிகழ் விண்ணில் — அவ்
விரிவில் — மின்னலில்
ஆன்றவர் கனவில் — நம்
அமுத வாழ்க்கையில்
தோன்றுக — புதுயுகம்
சுடர்க வையமே!

# K.R.R. & Sons ஜுவல்லரியின்

குடும்ப நல சேமிப்புத் திட்டத்தில்
சேர்ந்து பயன் அடைந்து விட்டீர்களா?

பொன், வெள்ளி நகைகள் பாத்திரங்களின்
அழகுக்கும், நம்பிக்கைக்கும் சிறந்த இடம்

## K. R. R. & sons Jewellers

(Air Conditioned)

Sri Radhakrishna Mansions
64, Usman Road,
T. Nagar, Madras-17

## ஸ்ரீ ராதாகிருஷ்ண
## கல்யாண மண்டபம்

குறைந்த செலவு... நிறைந்த வசதி...

கல்யாணங்கட்கும், விசேஷங்கட்கும்
சிறந்த இடம் இதுவே!

முழு விவரங்கட்கு :

**K. R. R. & Sons,**
64. Usman Road
T. NAGAR, MADRAS. 17.

# செந்தமிழ்செல்வர் 'கலைமகள்' ஆசிரியர்

## கவிஞர். கி. வா. ஜகந்நாதன் அவர்களின்

## வாழ்த்து

மனித உள்ளத் துள்ளே
மனமும் அறியா ஆழத்
தினிலே உள்ள எல்லாம்
இதுவென் றுருவிற் காட்டும்
புனிதச் சொல்லைப் பொன்னின்
பொடிபோல் வைத்துப் பெரிய
தனிமைப் பாழின் பாழைச்
சார உணரச் செய்யும்,

காலத் தாலே செத்துக்
கழியும் தன்மை யில்லை;
ஞாலத் தார்க்குக் கடையா
தருந்தும் நல்ல அமுதம்;
சீலத் தாலே ஓங்கச்
செய்யும் மருந்து கவிதை;
ஓலத் தாலே வருமோ
உள்ளத் திருந்து சுரக்கும்;

இன்ன வண்ணம் கவிதை
எமக்குத் தந்த அண்ணல்
மன்னன் பார திப்பேர்
வைத்து வாழும் கழகம்
நன்னர்க் கலையை வளர்த்து
நாளும் ஓங்கல் அறிவேன்
அன்ன கழகந் தனக்கிங்
காண்டு விழாவென் றூர்கள்.

பார தத்தாய் அவையின்
பாவ லன்தண் டமிழின்
சீரை ஏத்தும் புலவன்
செய்ய நாமம் கொண்டே
ஆரும் இலக்கி யத்தின்
அரிய சுவையை உணரும்
ஏர் கொள் கழகம் வாழி!
இனிய அன்பர் வாழி!

# POORNIMA ELECTRONICS

RADIO ENGINEERS.

7, THAMBIA REDDI ROAD
MADRAS—33

EXPERTS IN SERVICING ALL KINDS OF RADIO & ELECTRONIC EQUIPMENTS

OUR LAB IS INSTALLED WITH all the equipments much as precision signal generator, sophisticated Radio and Transister analysers, stablised power supplies, Universal impedence Bridge, valve and Transistor checkers etc , and Our main aim is to satisfy our customers.



# பாரதி கலைக் கழகம்,

## சைதாப்பேட்டை, சென்னை-15

நிரந்தரத் தலைவர் :

**மகாகவி சுப்ரமண்ய பாரதியார்**

தலைவர் :

**இரா. சுராஜ்**

உபதலைவர் :

**நா. சீ. வரதராஜன் ('பிஷ்மன்')**

செயலாளர் :

**வ. சா. பஞ்சநதீசன்**

துணைச்செயலாளர்:

**முருகசரணன்**

பொருளாளர் :

**ப. நா. பாலசுப்பிரமணியன்**

செயற்குழுவினர் :

| | |
|---|---|
| கு. மகாலிங்கம் | ஜி. எபனேசர். |
| க. தேவநாராயணன் | கே. ராமமூர்த்தி |
| 'இளங்கார்வண்ணன்' | "இளையுவன்" |

# பாரதி கலைக் கழகம்

## சைதாப்பேட்டை

## ஆண்டறிக்கை

சொல் புதிதாய் சுவை புதிதாய் சோதி மிக்க நவ நவமான நல்ல கவிதைகளை நாட்டுக்களித்த பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பெயரைக் கொண்டு இயங்கி வரும் பல இலக்கியச் சங்கங்கள் உலகின் பல பாகங்களிலும் உண்டு. என்ருலும் 1951-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாரதி கலைக் கழகத்தின் பணி பல விதங்களிலும் சிறப்புடையதாகப் பரிமளித்து வருகின்றது.

'நாலடியார்', கம்ப ராமாயண, இலக்கிய வகுப்புகளும் பாரதியின் குயில், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு ஆகியவற்றின் விளக்க வகுப்புகளும் வெகு சிறப்பாக நடைபெற்றன. இலக்கியத்துறை நிபுணர்கள் பலர் சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவர்களையும் நாடுகாக்கும் நல்லவர்களாகச் செய்யும் நல்லெண்ணத்தோடு கழகத்தில் 'பாலர் பகுதி ஒன்று திரு ரா. பார்த்தசாரதி அவர்களது சீரிய முயற்சியால் நடத்தப்பட்டது. பாலர் பகுதி உறுப்பினர்களான சிறுவர் சிறுமியர்கள் பல வானெலி நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். நல்ல நூல்களைப் பயின்று சிறுவர்கள் நல்லவர்களாக வளர்ச்சி பெறவும் கழகம் உதவியுளளது.

கடந்த சில ஆண்டுகளாகக் கழகம் நடத்தி வரும் ''மாதமோர் கவியரங்கத்தின் புகழ் நாடு முழுவதும் பரவியிருக்கிறது. மாதம் ஒரு முறை கழகக் கவிஞர்களை ரஸிகர் ஒருவர் கூட்டிக்கவி விருந்தளிக்கும் கவிஞர்களுக்கும் ரஸிகர்களுக்கும் நல் விருந்தளித்து வரும் இம் முயற்சி நல்ல வெற்றி கண்டுள்ளது.

கவியரங்கத்தின் வெள்ளி விழா 1970 ஜனவரியில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கலைஞர் திரு.

டி. கே. சண்முகம் விழாவைத் துவக்கி வைத்தார். ஆசிரியர் திரு. நாரண துரைக்கண்ணன் விழாமலரை வெளியிட்டார். கவிஞர் திரு. கொத்தமங்கலம் சுப்புவின் தலைமையில் பல கவிஞர்கள் பங்கு கொண்ட வெள்ளி விழாக் கவியரங்கமும், திரு நாரண. துரைக்கண்ணன் அவர்களை நடுவராகக் கொண்டு நடைபெற்ற பட்டி மன்றமும் விழாவின் சிறப்பைப் படம் பிடிக்கும் வகையில் அமைந்திருந்தன. கி. வா. ஜகந்நாதன் அவர்களுடைய தலைமையில் திருவாளர்கள் எஸ். பாஷ்யம், ந. ரா. முருகவேள், வே. சிவசுப்ரமண்யம் ஆகிய இலக்கியப் பிரமுகர்கள் உரையாற்றி, கருத்தரங்கினைக் கவின் மிக்கதாகச் செய்தனர். கவிஞர் திரு. தேவநாராயணன் இசை நிகழ்ச்சியும், கணபதி தேசீயப் பள்ளி மாணவ மாணவியர் நடத்திய கலை நிகழ்ச்சியும் பார்த்தவர்களையும் கேட்டவர்களையும் பரவசப் படுத்தும் பாங்குடன் அமைந்திருந்தன.

1970-ம் ஆண்டில் நடைபெற்ற கவியரங்கம் பற்றிய விவரங்களை மலரில் வேறு இடத்தில் காணலாம். கழக நிகழ்ச்சிகள் மட்டுமல்ல-கழகக் கவிஞர்கள் வெளியார் நடத்தும் விழாக்களிலும் பங்கு கொண்டு சிறப்பித்து வருகின்றனர். பாரதியார் சங்கம், சென்னை பாரதி இளைஞர் சங்கம், சிந்தனைக் கோட்டம், பம்பாய் பாரதி கலாமன்றம் முதலான இலக்கியச் சங்கங்கள் நடத்திய பாரதி விழாக்களில் கழகக் கவிஞர்கள் பலர் பங்குகொண்டு சிறப்பித்தனர்.

இலக்கியப் பணி புரிவதையே மூச்சாகக் கொண்டு இயங்கி வருகின்ற பாரதி கலைக் கழகம் செய்து முடித்துள்ள காரியங்கல் பல. வெள்ளிவிழா ஆண்டை நோக்கி வெற்றி நடைபோடும் கழகம் சீரிய பல இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து செய்யக் காத்திருக்கிறது. ஆண்டுதோறும் பல இலக்கிய விழாக்கள் நடத்துவதன் வாயிலாக இலக்கிய அன்பர் பணி செய்ய, தன்னை ஆளாக்கிக்கொண்டு இலக்கிய இன்பநிலை எய்த முயற்சிக்கும் கழகத்தின் செயல்களுக்குத் தோள் கொடுத்துத் துணைபுரிந்துவரும் அன்பர்களுக்கு ஆயிரம் முறை நன்றி நவில்கிறோம்.

சங்கம், மேலும் மேலும் வளர்ந்து இலக்கியச் சேவை புரிய பெரியவர்களது நல்லாசியையும் எல்லாம் வல்ல இறையருளையும் நாடி நிற்கின்றது.

வாழ்க பாரதி நாமம்!
வாழ்க பாரத நாடு!!

இரா. சுராஜ்
தலைவர்.

வ. சா. பஞ்சநதீசன்
செயலாளர்.

Grams : AGISHUN.

Phone : H.O. 441382
440149
Branch : CH 244

# SRI SHANMUGANANDA PROVISION STORES

Proprietor :

A. G. SHUNMUGA MUDALIAR,

*Dealers in:*

SUGAR, RICE, PULSES, OILS. TOILETRIES, CATTLEFEEDS ETC.,

AVAILABLE IN

WHOLESALE and RTAIL AT COMPETITIVE RATES

*Head Office* :

## No. 13, V. V. Koil street,

## SAIDAPET, MADRAS-15.

BRANCHES :

A.G.S. COFFEE

11. CAR STREET. MADRAS-15.
11, JONES ROAD, MADRAS-15.
64, BAZAAR ROAD. CHINGLEPUT

SRI SHANMUGANANDA FLOUR & OIL MILLS

8, Ramanujam Pillai Street, MADRAS-15.

# பாரதி கலைக்கழகம், சைதாப்பேட்டை

## மாதம் ஒரு கவியரங்க விவரம் (1970—71)

| வ. எண் | நாள் | அமைப்பாளர் | இடம் | கவிதைப்பொருள் | தலைமை |
|---|---|---|---|---|---|
| 26 | 18—1—70 | பாரதி கலைக்கழகம், | ஸ்ரீ சௌந்தரீஸ்வரர் ஆலயம், சைதை | வெள்ளிவிழாக் கவியரங்கு | கொத்தமங்கலம் சுப்பு |
| 27 | 22—2—70 | பா-பாபு ஆய்வு வட்டம், சென்னை | மத்திய நூலகம், சென்னை | பா-பாபு அஞ்சலி | K. ராமமூர்த்தி |
| 28 | 29—3—70 | பாரதி கலைக்கழகம் | ஸ்ரீ கணபதி தேசிய நடுநிலைப்பள்ளி | 'அன்றும் இன்றும் | முருகசரணன் |
| 29 | 12—4—70 | சிந்தனைக் கோட்டம் மயிலை | மயிலாப்பூர் | பாரதி வழிப்பா | தண்டமிழ்க் கொண்டல் |
| 30 | 31—5—70 | திருமதி ஹா.கி.வாலம் | ,, | நெஞ்சை அள்ளும் சிலம்பு | இளங்கார்வண்ணன் |
| 31 | 14-6-70 | திரு மஹி | நங்கை நல்லூர் | எல்லாம் புதிது | நா சீ. வாதராஜன் |
| 32 | 30-7—70 | பாரதி கலைக் கழகம் | ஸ்ரீ கணபதி தேசிய நடுநிலைப்பள்ளி | நவரசம சிருங்காரம் | ரா. பு. தங்கராஜன் |
| 33 | 30—8—70 | ரா. பு. தங்கராஜன் | ,, | ,, அச்சம் | மஹி |
| 34 | 27—9—70 | தேவநாராயணன் | மயிலை | நகைச்சுவை | தமிழ்முடி |
| 35 | 25—10—70 | காந்தி வட்டம் | மத்திய நூலகம், | காந்தி அஞ்சலி | கொ. விசுவநாதன் |
| 36 | 29—11—70 | வி. எஸ் மணி | கிருஸ்ணஸாமி வித்யாலயா சென்னை-24. | தேசபக்தர் நினைவுக் கவியரங்கு | K. ராமமூர்த்தி |
| 37 | 13—12—70 | பாரதி இளைஞர் சங்கம் சென்னை | ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹால் மயிலை | பாரதி பிறந்தார்: | நாரணதுரைக் கண்ணன் |
| 38 | 24—1—71 | திரு சுராஜ் | கணபதி தேசியநடுநிலை பள்ளி சைதை | பாவைத் திருநாள் | நா. சீ. வரதராஜன் |

# கவிதை வாழும் களங்கள்

ஆசிரியர் கவிஞர் நாரண - துரைக்கண்ணன்

''இயலொடு இசைமிழற்றும் எழில் நட நங்காய்! நீ தான்
பயில்வது என்ன?'' என்றேன்: பவழவாய் திறந்தாள் பாவை;
குயிலினு மினியதான குரலினில் மொழியலுற்றாள்:
' செயிரது தீர்க்குந்தொன்மை செந்தமிழ்க் கவிதை'' யென்றாள்

''அமிழ்துமாம் கவிதைக்கே ஓர் இலக்கணம் என்ன''வென்றேன்
''இமிழ்திரை உலகிலுள்ள அழகெலாங் கவிதை'' யென்றாள்;
''குமிழ்ச்சிரிப் புதிர்க்குங்கோதை கூத்தெலாங் கவிதையே தான்
தமிழ்தனில் உள்ளவெல்லாச் சொற்களுங் கவிதை சொல்லும்

''மனத்துக்கண் மாசில்லாத மா்தவத்தோர் உள்ளத்தில்,
கணத்திலுஞ் சிந்தைமாறாக் கற்புடை மாதர் பொற்பில்,
புனத்தினில் பூக்கும் பூவில் புகழ்மிகு சிற்பக்கோவில்,
இனத்தினைப் பெருக்கும்ஜீவ ராசியில் கவியிருக்கும்

''எங்கெங்கு அழகதுண்டோ அங்கெலாங் கவிதையுண்டு;
எங்கெங்கு உண்மையுண்டோ அங்கெலாங் கவிதையுண்டு;
எங்கெங்கு அறிவன்புண்டோ அங்கெலாங் கவிதையுண்டு;
எங்கெங்கு அறந்தானுண்டோ அங்கெலாங் கவிதையுண்டாம்:

' உண்மையை உயிராப்போற்றும் எழுத்துச்சொல் கவிதையாகும்
உண்மைய அழகாயாக்கும் அருஞ்சுவை கவிதையாகும்;
உண்மையை உரையாச் சொல்லும் உறுபொருள் கவிதையாகும்
உண்மையை ஓவந்தீட்டும் ஓட்பமுங் கவிதையாமே,''

# எது சுதந்திரம்?

குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா

ஒன்பது மணிவரை படுக்கையில் கிடந்தே
உறங்கிடும் பொன்னனை எழுப்பினள் அம்மா.
"இன்றுநம் தேசச் சுதந்திரத் திருநாள்
எழுவாய் சீக்கிரம்" என்றனள் அம்மா;

"சுதந்திர நாளில் சுகமாய்த் தூங்கச்
சுதந்திரம் உண்டு. சும்மா போபோ,
மதியம் வரை நான் தூங்கிடுவேன்" என
மறுபுறம் திரும்பியே பொன்னன் படுத்தான்

பதினொரு மணிவரை தூங்கும் பொன்னனைப்
பார்த்ததும் தந்தை கோபம் கொண்டார்
முதுகினில் இரண்டு பலமாய் வைத்தார்.
முணுமுணுத் தவனும் துள்ளி எழுந்தான்.

அன்னையும் தந்தையும் சுதந்திர நாளில்
அடிமைபோல் என்னை நடத்திடுகின்றார்
"இன்றுநான் எந்தன் இஷ்டம் போலவே
எதையும் செய்வேன்" என்றே நினைத்தான்.

கல்லை எடுத்தான், கருநிற நாயின்
காலைப் பார்த்துக் குறிவைத் தெறிந்தான்.
வொள் என நாயும் சீறிப் பாய்ந்திட
நொடியில் பொன்னன் ஓடி ஒளிந்தான்

சாலையில் கைகளை வீசி நடந்தான்.
தனக்கே சுதந்திரம் எனவும் நினைத்தான்
மாலையில் கார்கள் வண்டிகள் வந்தும்
வழிவிடவில்லை, எதிரில் நடந்தான்.
சட்டென ஒருகார் அவன்மேல் மோதத்
தாவிக் குதித்தவன் ஓரம் விழுந்தான்
பட்டெனத் தலையில் அடிபட லாச்சு.
பந்தென நெற்றியும் புடைத்திட லாச்சு

சுதந்திர நாளில் நினைத்ததைச் செய்வதே
சுதந்திரம் என்று பொன்னன் நினைத்தான்
விதம்வித மான தொல்லைகள் அடைந்தான்
மெத்தவும் மனத்தில் வேதனை உற்றான்.

சோம்பியிருப்பது சுதந்திர மில்லை
தொல்லை கொடுப்பதும் சுதந்திர மில்லை
வம்புகள் செய்வதும் சுதந்திர மில்லை.
வேறெது உண்மைச் சுதந்திர மாகும்?
பிறரது உரிமையை மதிப்பது சுதந்திரம்
பேச்சிலும் செயலிலும் தூய்மையே சுதந்திரம்
உரிமையும் கடமையும் ஒன்றாய்ச் சேர்வதே
உண்மையில் சுதந்திரம் சுதந்திரமாகும்!

Phone : 442565

*For*

**INDEPENDENT BUILDINGS, FLATS WITH PLOT, ;**

**MODERN AMENITIES MOSAIC FLOORING**

**FLUSH DOORS WITHIN MODERN CITY**

*Contact* :=

# THE MODERN BUILDERS

1 "A" Rama Rao Street, T. NAGAR MADRAS 17

# புலராக் கவலை

கவிஞர் எழில் முதல்வன்

கவலைக் கிழங்கை அகழ்ந்தெடுத்து— நான்
களிப்பாய் வாழ நினைத்திருந்தேன் !
சவலைக் குழந்தை போலாகி — நான்
தனியே நின்று தவிக்கின்றேன் !

ஒன்றை எண்ணிப் பலமறந்து — நான்
உள்ளுள் உவந்து திளைக்கின்றேன் !
இன்று நாளை என்றெண்ணி — நான்
இலவு காத்து நிற்கின்றேன் !

விரும்பா ஒன்றை அடைகின்றேன் ! — நான்
விழையும் ஒன்றை இழக்கின்றேன் !
திரும்பத் திரும்ப என் வாழ்வில் — இது
தினமும் நடக்கக் காண்கின்றேன் !

நிலைக்கும் என்று நம்புங்கால் — நான்
நீர்க்குள் பாசி ஆகின்றேன் !
நிலைக்கா தென்று தெரிந்திருந்தும்—நான்
நெட்டைக் கனவில் மிதக்கின்றேன் !

நேசிப் பாரும் எனக்கில்லை ! — என்
நேசம் ஏற்க ஆளில்லை !
ஆசை வேரைக் கிள்ளிவிட — நான்
அரிது முயன்றும் பயனில்லை !

குவித்த பொருளும் நற்புகழும் — எனக்குக்
குழியைத் தோண்டக் காண்கின்றேன் !
அவித்த விதையாய் ஆய் விட்டேன்! — தோல்வி
அடைந்து அடைந்தே சலித்திட்டேன் !

இழைத்த நாட்கள் தேய்ந்ததனுல் — வாழ்வின்
எல்லைக் கோட்டில் நின்றபடி
கழித்த நாளைக் கணிக்கின்றேன்! — புலராக்
கவலை ஒன்றே காண்கின்றேன் !

———

# என் கவிதை!

சந்தக் கவிமணி—தமிழழகன்

சந்தம் சலசலெனச்
சாரலிளம் பன்னீராய்ச்
சிந்தும் சிலுசிலுப்புச்
செந்தமிழே என்கவிதை!

காலச் சிறைவிரித்துக்
கட்டற்ற மேனி ஒன்ருய்க்
கோலச் சுவை தெறிக்கும்
கொந்தளிப்பே என்கவிதை!

கீதம் இனிய குயில்
கிண்கிணியின் வீணைகளாய்ப்
போதும் கனியுமுயிர்ப்
புல்லரிப்பே என் கவிதை!

நாதக் கிறுகிறுப்பில்
நளினமணி வார்த்தைகளாய்க்
காதல் விறுவிறுக்கும்
கண்சிமிட்டே என்கவிதை!

பாட்டுக் கருணகிரிப்
பாவலனைக் கூட்டுவித்து
நாட்டுக் கரண் அமைக்கும்
நவயுகமே என்கவிதை!

# இலக்குவன்

கவிஞர். ரா. பு. தங்கராஜன்

(கம்பன் கவியரங்கில் இலக்குவன் பற்றிப் பாடிய
பாடல்களிலிருந்து சில வரிகள்)

அண்ணாவின் தம்பி! அனல் தெறிக்கும் சொல்லாளன்!
கண்ணாக அண்ணனையே காத்துநிற்கும் வல்லாளன்!
அக்ரமத்தைக் கண்டுவிட்டால் ஆர்ப்பரிக்கும் வில்லாளன்:
வக்ரமதி! சூழ்ச்சியெலாம் வாட்டவரும் தீக்கணையான்!

ஆறாத காதலினன் ; அண்ணனுக்குத் தீங்கென்றால்
சூறாவளியாவான்; சுமித்திரையின் முதல் தோன்றல்
நீங்காமல் ராமனது நிழலாகத் திரிந்திடுவோன்
தூங்காமல் அண்ணனுக்குத் துணையாக நின்றிடுவோன் !

ஊறிழைக்க எண்ணுபவர் உயிர்குடிக்கும் பாம்பாகச்
சீறிடுவான்; அவன் ஆதிசேடன் அவதாரமன்றோ?
இலக்குவன் எனும் பேரான்; இராமனுக்காய் மூவுலகும்
கலக்கிடவும் வல்லவன் காண் ;காலனையும் புறங்காண்பான் !

தந்தை இனி ரகுராமன் தாயுனக்குச் சானகி தான்
இந்த மொழி கூறி விட்ட இலக்குவனின் அன்னையவள்;
மீண்டுவந்தால் ராமனை நீ பின் தொடர்ந்துவா இலையேல்
மாண்டு விடு முன் என்றாள் மாதாசொல் மனம் பதித்தான்

வில்லேந்தி கானகத்தில் விதிநினைந்து வெய்துயிர்த்தே
அல்லேகும் வரையில் கண் அயராமல் காத்துநிற்பான்
தாய் செய்த வஞ்சனையின் தழும்பேறி விட்டதனால்
காய் சினமே யன்றி அவன் கருத்தினில் வேறொன்றுமில்லை

# காந்திக்கு ஒரு கடிதம்

கவிஞர். நா. சீ. வரதராஜன்

திண்டுதற்கு முடியாத திபஒளி ஆனவரே
நீண்டிருக்கும் தன்னலங்கள்' நின் ஒளி முன் திரை கட்டி

நேர்ந்திருக்கும் கருநிழல்கள் நீளப்படர்ந்ததனுல்
சேர்ந்திருக்கும் இருட்டொன்றே திசை கவிந்து நிற்கிறது

இருட்டுக்குக் கண்பழகி இதுவொன்றே நிஜமென்னும்
மருட்சிக்குப் பலியான மயக்கத்தில் உள்ளவர் முன்

நீர் வந்து நின்ருலும் நிச்சயமாய்ப் பேயென்று
பேர்வைப்போம் நீர் வகுத்த பெரு வழியைத் தூர்த்ததிலே

ஒற்றுமையைச், சத்தியத்தை உயர்ந்த ஜனநாயகத்தை,
மற்றும் அஹிம்சையினை, மண்ணில் புதைத்ததன் மேல்

சிலையுமக்கு வைத்துள்ளோம் தேசத்தார் கண் முன்னர்
கலை நயக்க நல்லவொரு காட்சிப் பொருளானீர்!

புத்தகத்தின் உள் உம்மைப் பூட்டி வைத்துக் காக்கின்ருேம்
தத்துவமாய் வெளிநாட்டுச் சந்தையினில் விற்கின்ருேம்

இவ்வளவு போதாதா? இன்ன மென்ன பேராசை?
கவ்வியிருக்கிறது காந்தியினை என்றெவரும்

பேசுதற்கு இடமின்றிப் பேசாமல் வானிருந்தே
தேசுமிகும் நீர் பிறந்த திருநாள் யாம் கொண்டாடும்

காட்சிதனைக் கண்டதனுல் களிப்படையும்
இந்த ஒரு

மாட்சியினை எண்ணி எண்ணி
மகிழ்வடையும் என்றுரைத்து

என் கடிதம் முடிக்கின்றேன்
இவ்வளவில்



ஸி. ஸுப்ரமணிய பாரதி ।

பாரதி கலைக்கழகக் கவிஞர்கள் திரு. நாரணதுரைக்கண்ணனுடன்



# பூரணமாய் வாழ்ந்திடுவோம்

கவிஞர்-இளங்கார்வண்ணன்

புழுக்கமும் கொசுவும் புரட்சி செயா நல்லிரவு!
கொழுத்த பெருந்தூக்கம் குரட்டையொலி சான்ருக
கும்பனுக்குத் தம்பியென கொஞ்சுகிறேன் துயிலுடனே
நம்பத்தான் முடியவில்லை துயில்மன்னன் நானும்தான்
விஞ்சும் துயிலின் வீக்கத்தில் சலிப்புற்று
கொஞ்சும் உதயத்தைக் கூவி அழைக்கின்றேன்.
இருகையும் இருகாலும் தன்வேலைத் துடிப்புக்கு
அறுநூருய் மாருவோ! அந்தியேன் வருகிறது?
பகலே போதாமல் பம்பரமாய்ச் செயலாற்றும்
அகத்தான் தன்னகமும் அணைத்துப் படபடப்பின்
சுனையில் தேன் சொட்டி சுகமாய்த் தடவிவிடும்
கணமாம் நல்லிரவின் கண்மயக்கைத் தேடுவதேன்?
எங்கும் பசுஞ்சூழல்! எழில் மலரும் வண்ணங்கள்!
பொங்கி வளமோடும் புனலோடும் பூம்படுகை!
கண்டு கண்டேயிந்தக் காட்சியில் சலி கண்கள்
மண்டிக் கிடக்கும் மோன மணற்பாலை
துகிலணியாப் பேரழகைச் சுவைத்துக் களிக்கிறது
முகிலின் மயிலாட்ட நாடகத்து மூட்டத்தின்
மூத்துச் சரமழையில் முகிழ்க்கும் மனமேதான்
குத்தும் சுடர் வெயிலின் கூசும் ஒளியழகில்
பித்தாகி வியர்வையுடன் பெருமூச்சு விடுகிறது
தத்திவரும் சேய்விரலாம் தளிர்தொட்ட புளகம்போல்
மழலைச் சிறுதென்றல் தொட்டசுகம் கண்டமனம்
சுழன்று சீறியெழும் புயலழகைத் துய்க்கிறது
நாதக் கனிவின் நளினத்தில் லயிக்கின்ற
காதுக்கு ககனத்தின் முழக்கம் பயச்சுவையாம்
கூடிவாழ் மானிடத்தின் கூட்டினிமை ரசனைக்கு
நாடும் தவத்தினிமை ஞானவெறிச் சுவையாகும்
பித்தனைப்போல் ஏதேதோ பிதற்றுகின்றேன்றேன் என்காதீர்
இத்தனையும் உணர்விழையும் இருதுருவம் காட்டத்தான்
துன்பக் கசப்பில் தோயாத தனி இன்பம்
பின்னர் திகட்டும் பிணியாகப் பீடிக்கும்
மரணமிலாத் தொடர்பிறவி மாநிலத்தின் வாழ்வதனை
இரணச்சீழ் நாற்ற நரகமதாய் மாற்ருதோ?

மாற்றமே வாழ்க்கைக்கு மலர்ச்சிதரும் வித்தாகும்
மாற்றமிலா வாழ்வதுவோ மரணத்திற்கொப்பாகும்
பலவண்ணம் திகழ்கின்ற மண்ணைப் படைத்தந்த
பலப்பலவும் ஒன்ருகிப் பரிணமிக்கும் தத்துவமே
பூரணமாய் நின்றெங்கும் பூரணனுய் நிறைகிறது
பூரணனைக் காண்பதற்கு பூரணமாய் வாழ்ந்திடுவோம்,

---


பாரதி கலைக்கழகத்திற்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்

J. சிவானந்தம் - S. V. கணபதி
ஒப்பந்தக்காரர்கள்

---

Telegrams: "VEEKAYDES" Phone: Office: 22586, Res: 63587

V. K. DURAISWAMY & Sons

Shipping, Clearing & Forwarding Agents
Transport Contractors,

FIRST FLOOR,

14, JAFFAR SYRANG ST.,
MADRAS-I.

# பைந்தமிழ்ப்பா பாரதிப்பா பார் !

'தண்டமிழ்க்கொண்டல்' புலவர்-சிதம்பரம் சுவாமிநாதன்

போற்றுமுடி மன்னவரின் பொன்னனைய பாரதியின்
பொலிவனைய கவிகளுக்கே
சோற்றுமுடி யன்னவரின் சொள்ளொழுகு திறனாய்வு
சொல்லுமொரு நூல் படித்தேன்
நாற்றுமதி யாற்றுவயல் போற்றுமோ போக்குமோ
நட்டகளை கெட்ட நிலையே
சேற்றுமதி சுற்றிவரு செக்குமதி யொக்குநூல்!
சேச்சே! இதற்குலாவா ?

(வேறு)

உறுதுணைப்பா உணராத உலுத்தப்பா உத்தமனே !
அறுசுவைப்பா தேன்சுளைப்பா பாரதிப்பா இதோவெண்பா!

(வெண்பா)

இனிப்பாநம் கைப்பா கரிப்பார்க் கரிப்பா
இனிப்பா வலர்ப்பயிர்க்கு கார்ப்பா-தனிப்பு(ள்)ளிப்பா
செந்துவர்ப்பா வாயின் செழுந்தமிழ்ப்பா ஆராயின்
பைந்தமிழ்ப்பா பாரதிப்பா பார் !



# சுப்ரமண்ய பாரதிக்கு வந்தனம்

கவிஞர்-சுகி சிவம்

சந்தியச் சுடர்விளக்கு
தத்துவப் பெருங்கணக்கு

சக்தி பற்றினைப் பிடித்த உத்தமன்-வெள்ளை
மக்களாட்சியிற் கொதித்தெதிர்த்தவன்

செய்த நற் றவங்களுக்கு
தெய்வமிட் டபொன் விளக்கு

முத்தமிழ்ப் பழம் பிழிந்த பொற்குவை-பாடல்
தத்தளித் தலுத்தவர்க்கு நற்கரை

இந்தியர்க்குரம் பிறக்க
இன்தமிழ்க்குலம் சிறக்க

வெற்றுடம் பெடுத்துவந்த வித்தகம்-வானில்
பொற்குடம் கவிழ்த்தவன் கையற்புதம்

ஒப்பரும் கருத்தொளித்து
முப்பெரும் படைப்பளித்து

இத்தலம் பிறப்பெடுத்து வந்த நம்-ராஜ
சுப்ரமண்ய பாரதிக்கு வந்தனம்.

# நேரு



கவிஞர் - 'பூங்குன்றனார்'

நேருமகன் நெஞ்சினிலே ரோஜாப் பூவே
நிலையான இடம்பெற்று விட்ட தாலே
பாரெங்கும் அவன்சென்றால் மக்கள் முன்னால்
படைகள்முன் உரையாற்றும் போதும் நாட்டில்
ஊரெங்கும் உலாவந்த வேளை வான
ஊர்தியிலே விண்வெளியில் பறக்கும் போதும்
பீரங்கி வெடிக்கின்ற போர்க்களத்தில்
பெரும்போரின் மத்தியிலும் அணிந்தே சென்றான்!

தமிழ்நாட்டில் உலாவந்த போது தஞ்சைத்
தரணியிலே மதுரையிலே இறைவன் கோவில்
குமிழ் ஏந்தி உயர்வானைத் தொட்டுப் பார்க்கும்
கோபுரங்கள் நிலைத்திருக்கக் கண்டான் போலும்!
அமிழ்தாகப் பேசுகிற அன்பின் செல்வன்
அள்ளியள்ளிக் கருமேகம் போல்புகையை
உமிழ்கின்ற துர்க்காபூர் பிலாய்கள் போன்ற
உருக்கிரும்புக் கோபுரங்கள் தோன்றச் செய்தான்!

தென்னாட்டில் கூடல்நகர் கோகிலத்தின்
தேனிசையைச் செவிநிறையக் கொள்வதுண்டு
தன்னாட்டில் 'கிர்' வனத்தில் இடைநுண்சிங்கம்
தண்ணீரைக் குடிக்கச்சிற் றோடை வந்தால்
கண்ணோட்டம் செய்துள்ளம் களிப்பதுண்டு;
கர்ச்சனையை கேட்டுத்தோள் உயர்த்தும் நேரு
இந்நாட்டின் முடிசூடா மன்னன் என்றார்
எப்போதோ முன்னாளில்! அதுவே உண்மை!

# கடல்

கவிஞர் - ஐயாறப்பன்

கடலோ எங்கும்
காணப் பரந்த புனல் உடலோ
அலையோ அதில்
அசைந்து நெளிந்துவரும் கலையோ.

மணலோ மலர்
மஞ்சம் என்னும் பஞ்சிடாத திடலோ
சுடரோ செம்மைச்
சோதிவிடும் சூரியனின் படரோ

வானம் அதன்
வளைவுக் கிடையில் பெருமோனம்
நீலம் அந்த
நெடிய கடல் உடுத்த கோலம்

பவளம் எங்கும்
பரந்த நெடுங்கடலில் திகழும்
முத்து அந்த
மோகனப் பெருங்கடலின் சொத்து.

சங்கம் கடல்
தந்த மலர் என்றலரும் எங்கும்
சோழி அந்தச்
சொக்கும் எழில் சங்கினத்தின் தோழி.

மீனம் அலை
மேலெழுந்து தாவிடும்வி மானம்
பறவை கூடிப்
பறந்துவிடும் ஆகையினல் சிறை வை.

நண்டு மெல்ல
நகர்ந்து நகர்ந்து வரக் கண்டு
காகம் அதைக்
கவ்வச் சிறகடித்துப் போகும்

நிலவும் சற்று
நேரத்திலே வான்முகட்டிலே உலவும்
காட்சி எங்கும்
காளிசக்தி செய்யும் இறை மாட்சி. !

# ஓடும் நதிகள்

கவிஞர் **பக்திசாரன்**

ஓடும் நதிகள் ஓடட்டும் — அவை
ஓலக் கடலில் கூடட்டும்
நாடும் திசைகள் மாறட்டும் எங்கும்
ஞானப் பசுமை சேரட்டும்

மலையின் அருவி பெருகட்டும் — இந்த
வையத் தரையில் உருகட்டும்
அலையின் எண்ணம் வளரட்டும் — எங்கும்
அன்பின் வண்ணம் மலரட்டும்

பழமைப் பிடிகள் உதிரட்டும் — இங்கு
பாறைத் தடைகள் சிதறட்டும்
அழிக்கும் புதுமை அழியட்டும் — எங்கும்
ஆக்கும் புதுமை வழியட்டும்

பழுத்த இலைகள் கழியட்டும் — இங்கே
பச்சைத் தளிர்கள் விழையட்டும்
உழைப்பின் பொருளை உணரட்டும்—அந்த
உண்மை அருளை அணையட்டும்.

கரையை இணைத்தே களிக்கட்டும் — காதல்
கவிதை மனத்தே அளிக்கட்டும்
கறையைக் களைந்தே ஓடட்டும் — அந்தக்
கடலில் நனைந்தே ஆடட்டும்.

ஓடும் நதிகள் ஓடட்டும் — அவை
உள்ளக் குறையைக் கூறட்டும்
ஓடும் நதிகள் பாடட்டும் — அவை
'ஓமென்' குரலில் கூடட்டும்

★

# சித்தமும் சித்திரமும்

கவிஞர் — 'கலாபாரதி'

சித்தத்தை வைத்து ஒரு
சித்திரத்தைத் தீட்டி விட்டேன்
சுத்த திரு ஆன்மாவை
சித்திரமாய்க் காட்டிவிட்டேன் (சித்தத்தை)

பக்திநெறி உணர்வினையே
பாத் திறத்தால் பாடிவிட்டேன்
சக்தி சிவ தத்துவத்தை
சாத்திரத்தால் நாடிவிட்டேன் (சித்தத்தை)

மெய்த் தவத்தின் பக்குவத்தை
மேன்மையுறக் காட்டிவிட்டேன்
மொய்த்த திருக் கூட்டமது
மூலமதைக் கண்டிடுமோ? (சித்தத்தை)

வாயதனைத் திறந்ததுமே
வையமெலாம் காணவைத்த
மாய திருக் கண்ணனது
மகிமையினைக் காட்டிவிட்டேன் (சித்தத்தை)

தாண்டவத்தால் சொல்லியற்றி
தாரணியை ஆட்டுவிக்கும்
ஆண்டவனின் திருக்கூத்தை
அம்பலத்தே காட்டிவிட்டேன் (சித்தத்தை)

தூலப் பொருளை யெல்லாம்
சூட்சுமமாய்க் காட்டி விட்டேன்
ஞாலத்துக் காட்சி யெல்லாம்
ஞான ஒளி காட்டு மங்கே! (சித்தத்தை)

# நான் வாழ்வேன்!

கவிஞர் —'மஹி'

உடலாங் கொள்கலத் துயிரேந்தி
உயிராம் மதுவைக் குடமேந்தி
கடமை யென்றே சுமக்கின்றேன்
காலம் பலவாய்ச் சுமக்கின்றேன்:
உடலே உயிரைச் சுமக்கிறதோ?
உயிரே உடலைச் சுமக்கிறதோ?
திடமாயி தனை யறி யேன் யான்
தினவுறு நோயுடன் சுமக்கின்றேன்.

படரும் கற்பனை வலுவாலே
பாழும் பசியை மறந்திருந்தேன்
சுடரும் புகழின் போதையிலே
சூழ்ச்சி உலகை மறந்திருந்தேன்
உடலும் ஓர்நாள் நீண்டுவிடும்
உயிரும் உடலை நீக்கிவிடும்
தொடரும் புகழின் வாழ்க்கையிலே
தூங்குங் கல்லறை உயிர்த்தெழுவேன்.

பாட்டின் பொருளாய் நானுவேன்
பாடல் இசையாய் நானுவேன்
ஏட்டின் எழுத்தில் நான் வாழ்வேன்
எல்லோர் மனத்தும் வாழ்ந்திருப்பேன்
நாட்டின் மக்கள் நாவினிலே
நாறுங் குடிசைச் சூழலிலே
வீட்டின் மாடியில் மெத்தையிலே
விழிப் போடென்றும் நான்வாழ்வேன்.

# செந்தமிழே!

கவிஞர்—தேவிதாசன்

மணியாய் ஒலித்தாய் செந்தமிழே
மகுடம் தரித்தாய் முத்தமிழே
அணியாய்த் திகழ்ந்தாய் வண்டமிழே
அறமாய்ச் சிறந்தாய் நற்றமிழே
பணியாய் உதித்தாய் பழந்தமிழே
படித்தேன் சுவைத்தேன் இன்றமிழே
தணிகாசலத்தான் அகத்தியர்க்குத்
தவத்தில் அளித்த அருட்டமிழே!

கொடிய சொல்லில் பழிப்பதனுல்
கொல்லும் அரக்கர் மொழியாக
படியும் பணத்தில் போற்றுவதால்
பாவ மனிதர் மொழியாக
விடியும் பக்தி வேண்டுதலால்
விளங்கும் தேவர் மொழியாக
வடிவம் மூன்று புதிதாக
வழங்கி விட்டோம் வருந்தாதே!

பத்தித் தமிழாம் இசைக் கடலில்
பாடும் அலேயாய் நாமிருப்போம்
முத்தித் தமிழாம் சிலம்பினிலே
முழங்கும் பரலாய் நாமிருப்போம்
சக்தித் தமிழாம் கோயிலிலே
சாத்தும் மலராய் நாமிருப்போம்
சித்தித் தமிழாம் தெய்வத்தைச்
சேரும் தொண்டாய் நாமிருப்போம்!

# இயற்கைக் கவிஞர் இளங்கோ

கவிஞர் தமிழ் முடி

கண்ணும் கருத்தும் காணுத
கடவுள் வாழ்த்தைக் காவியத்தில்
பண்ணும் பழைய வழக்கமதை
பக்குவ மாக மாற்றிடவே
விண்ணில் உலவும் தண்ணிலவை
விரிந்த சுடராம் ஞாயிற்றை
மண்ணில் பெய்யும் வான் மழையை
மற்றும் சோழன் பூம்புகாரை
எண்ணிக் கடவுள் வாழ்த்தாக
இளங்கோ படைத்ததும் எதனுலே?
எந்தப் பொருளும் கடவுளென்றே
இயம்பும் வேதம் அதனுலே
இந்தப் புவியில் பயன் நல்கும்
இனிய நிலவு, கதிர், மழையை
வந்தனை செய்து வாழ்த்தியது
வரம்பில் லாத பெருங் கடவுள்
சிந்தனை யாலே! இயற்கையிலே
தெய்வம் கண்ட தெளிவாலே!
சிந்தனை செய்வீர் இளங்கோ போல்
சிறந்த இயற்கைக் கவிஞருண்டோ?

# பாடாத வாயும் உன்னைப் பாடுமே

கவிஞர் — க. தேவநாராயணன்

அணுவுக்கும் அணுவே
அகண்டத்தின் முடிவே
நினைவுக்குள் நிறைவே
நித்தியப் பொருளே

கனவுக்குள் கனவே
காட்சிக்குள் காட்சியே
உணர்வுக்குள் உணர்வே
ஒளியேற்றும் தீபமே

பாடாத வாயும் உன்னைப் பாடுமே
பணியாத தலையும் உன்னைப் பணியுமே
தேடாத கண்கள் உன்னைத் தேடுமே
தெய்வமே நீ உண்மை என்றுமே — பாடாத)

வாடாத தீபமொன்று வானத்திலே தந்தாய்
வட்டமிடும் கோளங்கள் வழியறிந்து சுற்ற
கோடானுகோடி பலகோடி உயிர் இங்கே
குடியிருந்து உணவருந்தி வாழும் வகை தந்தாய்—(பாடாத)

ஆண்டவனே மனிதனுக்கு ஆறறிவு தந்தாய்
அந்த ஒரு மகிமையினல் உன் அருகில் வந்தான்
வேண்டும் சுவையறிந்திடவே ஐம்புலன்கள் தந்தாய்
விரும்பும் சுவையறிந்து அவன் உன் ஒளியைக் கண்டான்
— (பாடாத)

# நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்

கவிஞர் — க. இரவி

தொல்காப் பியமே அரியணையாய்த்
தொல்புகழ் மிக்க திருக்குறளே
நல்லறம் ஓச்சும் செங்கோலாய்
நானிலம் போற்றும் நற்கம்பன்
சொல்லோ வியமே மணிமுடியாய்
சொர்ணம் இழைத்த அணிகலன்கள்
பல்வகை நூலாய்ப் பரிமளிக்கும்
பைந்தமிழ்த் தாயின் புன்னகையே.

இலக்கியம் என்னும் தோட்டத்தில்
இலங்குதற் றென்றல் காற்றே — என்
கலங்கிடும் நெஞ்சைக் களிப்பேற்றும்
கவிச்சுவை யூறும் கனிரசமே
நிலமிது வாழ நெறிபலவும்
நிகழ்த்திக் கூறும் நிலையெழிலே
சிலப்பதி காரத் திருமகளே — என்
சிந்தனை யிற்பொலி சித்திரமே

கற்புத் திறத்தின் வலிவினையும்
காதற் களத்தின் பொலிவினையும்
அற்பத் தனமாய் அரசியலில்
ஆடும் கயவர் அழிவினையும்
சொப்பன வாழ்வில் மனிதர்களைச்
சுழன்றிடச் செய்யும் ஊழ்வினையும்
அற்புத மாக உணர்த்துகிறாய்
அழியா அழகாய் விளங்குகிறாய்!

இயலும் இசையும் நாடகமும் இலங்கும் இனிமைக் காவியமே
நயமும் வளமும் நனிசிறந்த நற்றமிழ் நூலே நற்கலையே
இயம்பற்கியலாப் புகழ் கொண்டாய் எந்தன் இதயப்
பூங்குயிலே

இயங்கும் எழிலில் இலக்கியமே — எமை
இயக்கிடும் வாழ்க்கை யிலக்கணமே!

# மாம்பழம்

கவிஞர் - ப. நா. பாலசுப்பிரமணியன்

மஞ்சள் நிற மாம்பழம்
மகிமையுள்ள மாம்பழம்
கொஞ்சம் நினைத்தாலும்
கொள்ளை ருசி மாம்பழம் !

தோப்பு மரம் பழுத்தால்
தொத்தும் அணில் வௌவால்
தீர்ப்பதற்குள் நாம் போய்
திரட்டிக்கொள்ள வேண்டும் !

நீலம், ருமானி, குண்டு
நிகரில்லாத ஒட்டு !
காலம் எல்லாம் உண்டு,
கையில் உண்டோ துட்டு ?

புளித்த சிறு பழமோ
பூச்சி கடித்த பழமோ
சுளிக்காமல் தின்பேன்
சும்மாக்கொடு அய்யா !




நேர்த்தியான,
நவீன,
வண்ண,
அச்சு வேலைகளுக்குச்
சிறந்த இடம்

★

கீதா அச்சகம்
4, ஆஸ்பத்திரி ரோடு,
சைதை, சென்னை-15.
போன் 3837

# வ. உ. சி.

இரா. சுராஜ்

கப்பல் ஓட்டினார் — வ. உ. சி.
கடலைத் தாண்டினார்
எப்பொழுதும் சொந்த நாட்டை
எண்ணி உருகினார்

சிப்பி ஏந்தினார் — சிறையில்
செக்கைத் தள்ளினார்
அப்பொழுதும் சொந்த நாட்டில்
ஆசை பெருக்கினார்.

கல்லுடைத்த கரங்களாலே
கவிதை எழுதினார்
நல்ல தமிழ் மொழி வளர
நாளும் உழைத்தார்.

சிதம்பரனார் பெயரை என்றும்
சிந்தை செய்குவோம்
சுதந்திரத்தைப் பாதுகாக்க
விரதம் பூணுவோம்!


பாரதக் குடியரசுத் தலைவரால்
"பத்மஸ்ரீ"
விருது அளித்துப் பாராட்டுப் பெற்றுள்ள
கவிஞர் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு
கலைஞர். அவ்வை திரு. தி.க. சண்முகம் அவர்களுக்கும்
பாரதி கலைக்கழகத்தின் நல்வாழ்த்துக்கள்
உரியதாகுக!



# 'பாரதி'

கவிஞர்-மதிவண்ணன்

கற்பனைக் குகையில் உணர்ச்சி உளியால்
சிற்பங்கள் செய்தவன் பாரதி!

அற்புத வானில் ஏறிப் பறந்த
அதிசயக் குயிலவன் பாரதி!

இதயக் குரலை எழுத்தில் வடித்த
இலக்கியத் தந்தை பாரதி!

புதைந்த மானிடக் கனவினுக் கிங்கே
புத்துயிர் தந்தவன் பாரதி!

மண்ணில் விண்ணைக் கண்டு மகிழ்ந்த
மந்திரக் கவிஞன் பாரதி!

கண்ணீர்த் துளியின் கதையை மாற்றி
கவிதைகள் தந்தவன் பாரதி!

இதய வீணையின் தந்தியை மீட்டியே
இசைகள் தந்தவன் பாரதி!

உதயங் கண்டு தலைக்குரல் கொடுத்த
ஒளியின் பிள்ளை பாரதி!

*With best compliments from:*

# Super Scientific Supplies

No. 4, BUJANGA RAO STREET,

SAIDAPET,

MADRAS-15

*

*Manufacturers and Dealers in*

LABORATORY REQUISITES.

# எண்ணம்

கவிஞர்-தம்பிசீனிவாசன்

ஏடெடுத்தேன் கவியெழுத; எண்ணங்கள் எங்கேயோ !
எத்தனையோ முன்தினத்தில் எங்கெங்கோ நான் இருக்க
புத்தழகுக் கவிக் கருத்து புலப்படுமே, அவை எங்கே?
நீச்சல் தடாகத்தில் நீரிடையே தோன்றியவை,
பீச்சில் உலவுகையில் பிறைமதியில் வரைந்த சில.
வேகத்தின் உச்சியிலே. மோனத்தின் ஆழத்தில்
போகத்தின் போதையிலே, சோகத்தின் சூனியத்தில்
எட்டியும் எட்டாதிருந்த எண்ணங்கள் அவை எங்கே?

எண்ணங்கள். எத்தனை வண்ணங்கள் !
எண்ணத்தில் வண்ணத்தில் எழுகின்ற கவி போல
ஏட்டில் எழுதிய சொல்லில் இல்லை.
சொல்ல நினைப்பதில் தோன்றும் ஒரு சுகம்
சொல்லிய சொல்லிலே காண வில்லை-கவி
பாடிய பாட்டிலே காணும் பொருள்,பிறர்
பாடிய போதில் தெரிவதில்லை
எண்ணங்கள், வண்ணக் கோலங்கள் !

கனவுக்கும் நனவுக்கும் நடுவே
காட்சிக்கும் கண்ணுக்கும் இடையே
படைப்புக்கும் ரசிப்புக்கும் ஊடே
படர்கின்ற நிலையொன்றில் ஆழ்ந்தேன்
படைத்தும் படைக்காமல்
ரசித்தும் ரசிக்காமல்
பாவனைகள் காண்பதிலே ஆழ்ந்தேன்,
பா வரைய ஏடெடுக்க வில்லை.

எண்ணங்கள் ஆயிரம் ஆயிரத்துள்
ஏட்டில் அடங்கும் ஒரு துளியின்
வண்ணங்கள் கண்டு மகிழ்ந்திடவே இங்கு
மாதம் ஒரு முறை கூடுகிறோம்
புண்ணிய நண்பர்கள் சூழலில் மட்டுமே
பூக்கும் புனிதத் தொடர்புகளை
எண்ணிய நேரத்தில் நானும் இந்தச் சின்ன
ஏட்டை எடுத்தேன் கவிஎழுத

---

இவ் வருடத்திய பிரத்யேக கலர் பட்டு
புடவைகள் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்.
கண்ணைக் கவரும் கலர்களில் காஞ்சிபுரம்
பட்டுப் புடவைகள் (காஞ்சீபுரம் விலைக்கே)
நவநாகரீக பனாரஸ், தர்மாவரம், ஆரணி
பட்டுப்புடவைகள் மற்றும் பம்பாய் பேன்சி
புதிய ரக சேலைகளும் ஏராளமாக வரவழைத்துள்ளோம்
உங்கள் தேவைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்,

# குமரன் சில்க்ஸ்

2. நாகேஸ்வரராவ் ரோடு, (பனகல் பார்க் எதிரில்)
தி. நகர், சென்னை-17. டெலிபோன்: 443544

தயாரிப்பு நிலையங்கள் :

குமரன் சில்க் ஹவுஸ்
மேட்டுக்தெரு, காஞ்சீபுரம்
டெலிபோன் : 789

குமரன் சில்க் சென்டர்
28, தென்னமரத் தெரு,
ஆரணி, டெலிபோன்: 60

*With the best compliments from*

# SREE
# Ramakrishna Lunch Home

**45 Years of Glorious Service**

RAMAKRISHNA LUNCH HOME

First cosmopolitan The best and cleanest
Restaurant in the City.

**Y. M. C. A. BUILDINGS,**
Esplanade, Madras.

# தென்றல் . . .

கவிஞர் - முருகசரணன்

பொதிகை மலைத் தண் புனிதச்
சாரலிலே தோன்றிப்
பொலிவுதருஞ் சந்தனத்தின்
கந்தமிகப் பெற்று
மதுரமான திருவருவி
இசையினிலே தோய்ந்து
மணக்கும் நனி மலர்களினை
வாரி வாரிக் கொண்டு
நதிக்கரையின் மருங்கினிலே
வளரும் நல்ல நல்ல
நன் மயிலை முல்லைக் கொடி
மீது மெல்ல மெல்ல
அதியினிமை யோடு விளை
யாடி உற வாடி
அந்தி வரும் மாருதமே
உன்னினிமை வாழி !

பிப்ரவரி 1-ந் தேதி முதல் மாதம் மும்முறையாக
1, 10, 20 தேதிகளில் வெளிவருகிறது

# மணி பாரதி

ஆசிரியர் : ராஜாமணி

தனிப்பிரதி 10 காசுகள் வருடச்சந்தா ரூ 4.

மகாகவி பாரதியின் லட்சியங்களைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபடும் இப்பத்திரிகை கதை, கட்டுரை, கவிதை, சுவையான செய்திகளுடன் வெளிவருகிறது.

ஆசிரியர், **மணி பாரதி** 22, பொன்னப்பன் சந்து.
**பார்க் டவுன் சென்னை-3**



சூடும் சுவையும் நிறைந்த பாலுக்கு

# S. N. S. பால் நிலையம்

**10. காரணீஸ்வரர் கோயில் தெரு,**
(தேரடி எதிரில்)
சைதாப்பேட்டை. சென்னை—15.

உரிமையாளர் **K. S.** சந்திரசேகரர்

---

S.N.S. MILK BAR
Car street, Saidapet, Madras—15.

# சிலம்பு

கவிஞர் - 'இளந்தமிழ் இறை'

கண்ணெனக் கணவன் காத்து
　　கற்பெனும் இமையில் போத்து
எண்ணமும் நோக்கும் போக்கும்
　　ஏற்றவன் வழிய தாக்கி
பெண்ணெனும் பெருமை பெற்ருள்
　　பீடினை மாதர்க் கீந்தாள்
கண்ணகி படைப்பின் நேர்த்தி
　　காலத்தால் அழியாக் கீர்த்தி
கொண்டவன் மாண்ட போதே
　　கோப்பெருந்தேவி மாதும்
அண்டையில் மாண்டு வீழ்ந்தாள்
　　அதுவன்ரே கற்பின் மாட்சி
கண்டது முண்டோவிக் காட்சி
　　கடல் சூழ் புவியிலெங்கும்
உண்டிங்கு தமிழில் என்று
　　உரைப்பதே சிலம்புக் காதை
செம்பியன் நாட்டுக் கோதை
　　செழியனின் நாட்டில் நீதி
வெம்பிடா வண்ணம் காத்து
　　வேழம் வாழ் சேர நாட்டில்
வெம் பிறப் பொழித்துத் தூய
　　விண்ணகம் சேர்ந்து யாரும்
கும்பிடும் தெய்வ மானுள்
　　கோவிலுள் இளங்கோ வைத்தான்!

*Dealers in:*

1. Allwyn Refrigerators
2. Thermofoam Insulation Materials
3. Accaire Airconditioners.

*Makers of:*

Ice Cream Freezer

Water Coolers

Ice Plants

Deep Freezers

Packaged Airconditioners

Aircooled Condensers

X-Ray Developing Plants.

# Refrigerators & Home Appliance (P) Ltd.,

**36, MOUNT ROAD.**
**MADRAS-2.**

Phone : 88716 / 88717    Telegram: VERIKOLD.

# சிதறிய சிந்தனைகள்!

கவிஞர்-எதிரொலி விசுவநாதன்

நிலவுக்குக் குளிரா?
மேகப் போர்வையா?
நித்திலங்கள் கண் இமைப்பதும் தவறு?

★

உலகுக்கு வானம்
உதவாக் குடையா?
ஒளியின் மழையின் உறவுக்குத் திரையா?

★

மலருக்கு மணமா?
இலைகளுக்கு இல்லையா?
மரமென்னும் தாய்க்கும் ஒரு வஞ்சனையா?

★

அலைகடல் கரையை
அணைப்பதும் அன்றி
ஆயிரம் முத்தங்கள் பகலிலும் வேறு?

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

எங்களிடம் உங்கள் வீட்டிற்குத் தேவையான எவர்சில்வர் பித்தளே, அலுமினியப் பாத்திரங்களும், ஊறுகாய் ஜாடி இரும்பு சாமான்கள் மற்றும் மரச் சாமான்களும் கில்லிக்ஸ் குக்கரும் குறைந்த விலையில் கிடைக்கும்.

தேவைக்கு மங்களகரமான எங்கள்

# பொன்லதா ஸ்டோர்ஸுக்கு

## விஜயம் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்

பாத்திரச் சீட்டுகள் சேர்க்கப்படும்.

**சீட்டு சேர்பவர்களுக்கு எவர்சில்வர் டம்ளர் & பிளாஸ்டிக் பக்கட் இனமாகக் கொடுக்கப்படும்**

**எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் நல்ல பயன் அடையுங்கள்.**

## பொன்லதா ஸ்டோர்ஸ்

(ரயில்வே நிலையம் எதிரில்)

53, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை,

**சென்னை-15.**

N.B :— பழைய அலுமினியம், பித்தளே, செப்பு, ஈயம் வாங்கப்படும்.



# பாரதி அஞ்சலி

ரா. பார்த்தசாரதி

பாரதத்தைப் பா ரதத்தில் ஏற்றினான்
'பாரிதுபோல் வேறெதெ'ன்று போற்றினான்
மாருதத்தில் மதுவின் போதை ஊற்றினான்
மருதவளச் சொல்லழகில் சாற்றினான்

தமிழ் மொழியைத் தாயெனவே கூறுவான்
'அமிழ்திது போல் மொழி இலையாம்' தேறுவான்
தமிழ் அருமை அறியாரைச் சீறுவான்
தமிழ் வளர வழியுமவன் கூறுவான்

கண்ணனைக் குழலிசைத்துப் பாடுவான்
காதலனாய்ப் பண்ணிசைத்துக் கூடுவான்
மன்னனைக் கலிக் கொடுமை சாடுவான்
மங்கையாக மோகமதில் வாடுவான்

குயிலிசையில் குழலிசையைக் கூட்டினான்
குரங்கினோடு மாடதையும் தீட்டினான்—வெறுங்
கற்பனையில் வேதப்பொருள் பூட்டினான் ஊறுங்
கவிதையிலே உண்மையெலாம் நாட்டினான்.

ஆத்திசூடி அறநெறியைச் சொல்லுவான்
அச்சமோடு அவலமெலாம் தள்ளுவான்
பக்தியினால் பாரனைத்தும் வெல்லுவான்
சக்தியினால் சிறுமையெலாம் கொல்லுவான்

பாரதியைப் பாரதத்தில் ஏற்றுவோம் தமிழ்
வாரிதியாம் வள்ளல் கவி போற்றுவோம்
பாரதிப் பண்ணதிரப் பாடினான் புகழ்
ஊரதிர உலகதிரப் பாடுவோம்

*With best compliments from:*

# S. APPASWAMY

*Real Estate Agent*

1, Ranganathan Street, Thyagarayanagar,

**MADRAS-17**

*

**Phone : 442927 and 441684**

# நினைவு....

கவிஞர் - இளையவன்

ஏதோ புதிய இன்பச் சிலிர்ப்பாய்
இன்னும் என்ற ஏக்க ஒலிப்பாய்
மோதுகின்ற நினைவை அன்றி
மீறுகின்ற விந்தை காணேன்

மார்கழி மாத மென்பனி மூட்டம்
மனதில் தெய்வம் வழிபடு நாட்டம்
ஊர்வலமாகத் தெருவில் உலவி
உரக்கத் துதிக்கும் ஒரு சிலர் காட்டும்
ஆர்வம் பெருகி அனைத்தும் கடவுள்
அருளே யென்னும் அன்பர் கூட்டம் (ஏதோ)

சன்னல் நுழைந்த சாரல் உணர்வு
சிலிர்ப்பில் விழுந்த சில்லரைக் கனவு
கன்னல் தமிழில் கோதை தொடுத்த
கவிதை ஒலிக்கக் கண்ணன் துணையில்
மின்னும் புதிய மலர்ச்சி பரவி
மீட்டும் சுந்தர மார்கழி நினைவு (ஏதோ)

*With the best best compliments of:-*

# GANAPATHI INSTITUTE OF COMMERCE

[ Apprd by Govt ]

**38, V. S. MUDALI STREET,**

**SAIDAPET :: MADRAS-15**

**BRANCH:**

No: 10, Jones Road, Saidapet, Madras-15

**For Expert coaching in ACCOUNTANCY SHORTHAND AND TYPEWRITING**

*With best compliments from:*

# SHANK'S

ASSOCIATES OF RAJU ESTATES

Civil Engineering Contractors

2, Balaji Avenue
(opp. VIDYODAYA)

T. Nagar
MADRAS-17

Phone: 443139

# ஏன் தந்தான்?

கவிஞர் இரா. ராஜலக்ஷ்மி

ஆசையெனும் ஏணிபற்றி அதிலேறத் தொடங்கினேன்
ஆனமட்டும் உயரமேறி அகிலங்காண விரும்பினேன்
கூசாம லிருகண்கள் குவலயத்தே பார்த்ததைக்
கூத்தனுமே எனக்கருள கும்பிடுமே சேர்த்தனன்
பிள்ளையாம் பருவத்தே கூட்டினி லாசை
பின்னேவரு நாள்விளை யாட்டினி லாசை
துள்ளுமென் இளமைக்குத் துணைமேல் ஆசை!
துணைக்குச் சேரக் கன்னியராசை!

இருபத்(து) ஆண்டினில் "எக்ஸிக்யூடிவ்' ஜாப்" ஆசை
இருக்கின்ற பட்டமெலாம் எனைச்சேர ஓராசை!
மறுபத்து, ஆண்டிற்குள் மனைவாங்கப் பேராசை!
மாநிலத்தே நானுலவ மனம் பெற்றது காராசை!
மீசைதான் நரைக்கையில் பொன்னிலே ஆசை!
மீட்டுமே அறுபதில் மண்ணிலே ஆசை!
மாசிலா இறைவன் கேட்டவை தந்தான்-ஏனோ
மரணம் மட்டும் கேளாமல் தந்தான்?

*With best compliments*

*from*

# POORNIMA INDUSTRIES
# PRECISION TURNERS
&
# ENGINEERING GOODS
# MANUFACTURERS

**WORKS & OFFICE.**

**40, AL. ALANDUR ROAD.**

**SAIDAPET MADRAS—15.**

# முத்துப் பனித்துளி

கவிஞர்- புலவர். தமிழ்நாகனார்

முத்துப் பனித்துளியே! -- இலைமேல்
எத்தனை நாள் இருப்பாய்?
முத்துப் பனித்துளி நான்—இலைமேல்
மூன்று கணம் இருப்பேன் !

★

இச்சைப் பனித்துளியே!—நீ ஏன்
பச்சைப் புல் மேலிருப்பாய்?
பச்சை மரகதத்தில்—வயிரம்
வெச்சுப் பதிப்பதற்கு !

★

சின்னப் பனித்துளியே!— நீ ஏன்
என்னை மயக்குகிறாய் ?
உன்னை மயக்கிடவே—இறைவன்
என்னைப் படைத்ததனால்!

★

நல்ல பனித்துளியே! உன்னை
மெல்ல நான் கோத்திடவா?
மெல்ல நீ கோத்திடவே—நூலும்
இல்லையடா உலகில்!

★

சின்னப் பனித்துளியே — இன்னமும்
என்னென்ன செய்திடுவாய்?
பொன்னம் பெருமையும்-என்னுள்
மன்னிடச் செய்திடுவேன்!

பளிங்குப் பனித் துளியே!—சிறிதாய்
விளங்கிடக் காரணமேன் ?
களங்கமிலா மனதை—உலகில்
விளங்கிடச் செய்திடவே!

இவ்விழாவில் வெளியாகிறது !

வாழ்க்கை நூல்கள் வரிசையில்

பாரதியாரின் தம்பிக்குப் பின்

எதிரொலி விசுவநாதன் எழுதிய

**திரு. வி. க. வின் தம்பி**

(அறிஞர், வெ. சாமிநாதசர்மாவின் வாழ்க்கை சித்திரம்)

அடுத்த வெளியீடு

நாரண துரைக்கண்ணனின் வாழ்க்கைச் சித்திரம்

**(வ. ரா. வின் தம்பி)**

நன்செய்ப் பதிப்பகம்,

சென்னை-15.

பாரதி கலைக் கழகத்திற்கு

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

P. K. தர்மலிங்கம்,

M. வேலப்ப முதலியார்,

சாத்தலிங்கம்.

K. A. செல்லப்பன்

தினசரி, வார, மாத
பத்திரிகைகளை
உங்கள் இல்லத்துக்கே
பட்டுவாடா செய்ய

பள்ளி மாணவர்களுக்குத்
தேவையான எல்லா ஸ்டேஷனரி
களும் சரசமான விலையில் பெற
எங்கள் கடைக்கு
வருகை தாருங்கள்

M/s. JANAKIRAM SONS

NEWS AGENTS

1-A, V.V, Koil Stret,

SAIDAPET, MADRAS-15.

Note: Stove Repairs and Electrical Repairs also are undertaken.

# அன்பு

கவிதா ரத்தினம்- ஸ்ரீமதி ஹா கி. வாலம்

துன்பக்கேணி தூர்க்கும் மார்க்கம்
வம்பு வழக்கை வாட்டும் வடிவேல்
தெம்பு அளிக்கும் தீரமருந்து
நம்பிக்கைக்கோர் நல்லணி செங்கோல்
எம்பின்வந்தோய் : எது எனில் கேளாய்:
அன்பு என்னும் அற்புத வைரம்
நன்மையளிக்கும் நல்ல சஞ்சீவி
எங்கிருந்தாலும் தங்குலம் காக்கும்
மங்காஒளியுடை மரகத தீபம்
கங்கு கரையில் கங்கைவெள்ளம்
பொங்கிப்பொழியும் பூரண நிலவு
சங்கையிலாது சற்குணர் அருந்தும்
தங்கபஸ்பம் தளரா உறுதி
அன்பு கொண்டோர் அச்சமிலாதார்
என்பு நெக்கேங்க இரு விழியரும்ப
புன்புலால் யாக்கை நினைவெலாமிழந்து
தன்மயமாகி அன்பு புரிந்தால்
என்னவரினும் இடரெலாம் தீரும்
சொன்ன துறுதி தங்காய் அறிதி;

மக்கள் விரும்பி வாங்குவது

காரம் மணம் குணம் நிறைந்த

# என். எஸ். வாசன்

## நெ. 1 ஆபீசர்ஸ் பட்டணம் பொடி

43, காரணீஸ்வரர் கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

குறிப்பு:— எங்களிடம் காரம் நிதறந்த பவுன் கலர் வெள்ளைப் பொடியும், சுகந்த மூக்குத்தூளும் கிடைக்கும்.

தனிச் சிறப்பும், பெருமதிப்பும் கொண்ட

# லிப்கோ புத்தகங்கள்

1. நாமக்கல் கவிஞர் பாடல்கள் — பாரதிக்குப் பின்னர் தேசியக் கவிஞரான உயர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கவிதைகள் அனைத்தும் அடங்கிய மாபெரும் தொகுப்பு நூல் 630 பக்கங்கள் ரூ. 9—25
2 கம்பராமாயணம் (உரைநடைச் சுருக்கம் ரூ. 3—90
3. சிலப்பதிகாரம்—மூலம் ரூ. 1—50
4. மணிமேகலை—மூலம் ரூ. 1—50
5. கடிதம் எழுதுவதுஎப்படி? 3-ம் பதிப்பு ரூ. 2—00
6. உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும் ரூ. 2—00

—:பதிப்பகத்தார்:—

தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை—17.

# ஒங்குமே!

கவிஞர். பூஸா. கிருஷ்ணசாமி

மண்டை ஓட்டை தொலைவில் கண்டு
ஓட்டம் காதம் பிடிக்கிறோம்
மண்டை ஓட்டை தலையில் என்றும்
தூக்கித் தூக்கி நடப்பவர்!

இருக்கும் இடத்தில் இருந்துவிட்டால்
பெருமை உண்டு உலகிலே
சிறந்த பொருளும் பிரிந்துபோனல்
குறைவு கொண்டு குமுறுமே!

இதைப்போல நிகழ்ச்சி பல
வையமெல்லாம் பார்க்கிறோம்
சிதைவு பட்டால் ஏற்றமின்றி
மங்கிக் குன்றி மறைகிறோம் !

புகழுடனே வாழ்ந்தவர்கள்
கீழே நோக்கி வீழ்ந்திட்டால்
துயருடனே பாக்கி வாழ்க்கை
விம்மி விம்மி ஏங்குமே !

# எங்கே போகிறேன்?

கவிஞர் - கே. வி. ராமசாமி

(ஒரு செல் ஜீவனுய்ப்பின் பரிணமித்து, பரிணமித்து, அந்தப் பரிணுமத்தில் பனிச்சிகரமாய், மனிதனை இன்னும் இன்னும் எங்கே எதை நோக்கிப் போகிறுன். ஆமாம்! மனிதனுன நான் எங்கே போகிறேன்!

கடந்த கால நினைவுகளைக்
கட்டிச் சுமந்து தோள்களிலே
நடந்து நடந்து போகின்றேன்
நண்பா! எங்கே போகின்றேன்?

முன்பே குனிந்த முதுகோடு
முதுகில் சுமந்த சுமையோடு
நண்பா! எங்கே போகின்றேன்?
நாடிச் செல்வேன் யாரைநான்?

ஒடிந்த உள்ளம் ஊன முற
ஓட்டை அறிவாம் கோலூன்றி
படிந்த இருளில் முடிவின்றி
முடிந்த கதியில் குறியின்றி

நடந்து நடந்து போகின்றேன்
நண்பா எங்கே போகின்றேன்

காலை மாலை கங்குலிலே
காற்றில் மழையில் பனியினிலே
சாலை யறியாச் சாலையிலே
தங்கா தெங்கோ போகின்றேன்

நண்பா! எங்கே போகின்றேன்?
நாடிச் செல்வேன் யாரை நான்?

*With best compliments*
*from*

# Sakthi Sugars Limited

Regd. Office:
72, Sengupta Street, Ram Nagar, Coimbatore-9

Grams: AHAMEDCO
Telex : MS 472

Phones: 21061
21062

# A. M. AHAMED & CO.,

EXPORT – IMPORT

Shipping, Clearing, Forwarding, Transport
Post Box No. 1792

255. Linghi Chetty Street,
MADRAS—1.

Branches: Madras. Sirkali, Adiramapattinam.
Office: Cuddalore, Tuticorin, Calicut.

Clearing, Forwarding. Transport & Labour Contractors
For
FOOD CORPORATION OF INDIA.

# MAHABALA PUBLISHERS
AND
# BOOK - SELLERS

12, Brahmin Street, Saidapet,
MADRAS-15

| | |
|---|---|
| Krishnamurthi Ephemeries— 1911 to 1940 A.. D. | Rs. 20—00 |
| Krishnamurthi Ephemeries— 1941 to 1956 A. D. | Rs. 12—00 |
| Krishnamurthi Ephemeries— 1957 to 1970 A. D. | Rs. 15—00 |
| Krishnamurthi's Table of Houses (under Print) | |
| Krishna murthy Padhdhati (2 Vols.) | Rs. 25—00 |
| Marriage & Married Life (Tamil) 2Vols. | Rs. 5—00 |
| Horary Astrology | Rs. 16—00 |
| Astrological Tables for all (Ready Reckoner) | Rs. 22—00 |

Postages Rs. 1-25 Extra for all Publications

Monthly Magazine in English
Astrology and Athrishta. Each Re. 1—00
Annual Subscription Rs. 12/-

# 'பா' விளக்கு

கவிஞர் - கே. ராமமூர்த்தி

கண்விழித்து கடன் புரிந்த கைவிளக்கு—நம்
கஸ்தூரி 'பா' விளக்கு, மெய்விளக்கு :
பெண் குலத்து ஜோதியவர் பொன்வாழ்வு—நம்
பெண்டிரெலாம் ஏற்றுயரும் நல்வாழ்வு :
இந்நிலத்து மங்கையர்க்கு குலவிளக்கு—நம்
இருளகற்றி நிற்குமவர் ஒளிவிளக்கு ;
தன்னலத்து ஆசையெலாம் பதிக்கிட்டு—இத்
தாரணியில் காந்தியோடு மதிப்புற்று

தெய்வமகள் வடிவெடுத்த அன்னையவர்—நம்
தொன்மைமிகு பண்புதிகழ் சின்னமவர் ;
தாயகமே வணங்கிநிதம் போற்றுதுகாண்—அவர்
வாழ்ந்தவழி வியந்துமிக ஏற்றுதுகாண்!
'பெய்யெனவே பொழியுமழை' என்றகவி—குறள்
பொன்மொழியே அன்னைவழி கண்டதுதான்
நெய்யெனவே தம்முடலம் ஆகுதியால்—சத்ய
நேயமுடன் வேள்விசெய்த நாயகியாம்.

கஸ்தூர்பா வாழ்வுயரும் படியானார்—நம்
காந்திமணி புகழுக்கொரு வடிவானார்.
அறம்கண்ட நாயகருக்குப் பணியானார்—நம்
அண்ணலுக்கு காந்திமிகு அணியானார் ;
பதித்தொண்டு புரிந்தவர் மொழியானார்—நம்
பாபுமனம் புகுந்தவர் வழியானார்.
உதிக்கின்ற கதிர்கிழக்கு ; சாத்திரமே—இவ்
உத்தமி — பா புகழ்கூறின், தோத்திரமே!

# படிப்பு

கவிஞர் - அரசு தாசன்

"படியடா தம்பி படியடா!" எனும் வாய்
"படித்தவன் தரித்திரம் பிடித்தவன்!" எனும் உளம்
எடுத்தவந் நூலை இறுக்கமாய் மூடித்
துடுக்கு மனத்தினை அடக்கிடப் பார்ப்பேன்;
அடுத்த நிமிடமே அரசியல் 'கோஷம்'
தடுத்து நிறுத்துமென் முனைப்பை: முயற்சியை!
'படித்தால் படிந்திடும் பண்பு பான்மை
கொடுக்குமோ வாழ்வில் குறைவிலா வளப்பம்?
படித்தவன் பண்புடன் பணியினைச் செய்வான்
பண்பினை யுடையவன் பணத்தினில் கடையவன்
பணிசெயல் கடன் எனும் மனத்தினில் அரும்புமோ!
பணம் பிணம் என தினம் பறந்திடும் பக்குவம்?
பணம் தரும் அரசியல் பண்ணத் தெரிந்திடின்
படித்தவன் உடலெலாம் நம்முன் வளையுமே!
படிப்பது கொடுத்ததென்? பாதி வயிறுதான்!
பாங்குற வாழ்ந்திட ஏங்கியே சாதலே!
துடிப்புடன் பொய்யெலாம் துணிவுடன் உண்மைபோல்
வெடிக்குரல் எழுப்பினுல் விரைந்து முன்னேறலாம்!
பிடிப்புவை அரசியல் கொடுத்திடும் "சொர்க்கம்!"
படிப்பு ஏன் அரசியல் படியினில் ஏறிட!
வென்றிடின் அமைச்சன் தோற்பின் : அதிகாரி
ஒருமுறை வெற்றியால் ஒருயுகம் வாழ் பணம்!
உன்னை நினைத்திடு, உன்மக னுலது
முன்னணி அரசியல் தன்னிலே 'உரு'ப்பட!
படித்தவன் அரகியல் பண்புடன் அமையலாம்
படியான் அரசியல் பணத்தால் அமையுமே!
மனத்தின் குரலை முழுமையும் கேட்டும்,
மனத்தை அடக்கி, மகனை நோக்கிப்
"படியடா தம்பி! படியடா!" என்பேன்
பிழைக்கத் தெரியாப் பித்தனென் றென்னை
அழைப்பினும் என்மகன் அவ்வழி ஏகான்!
வாழ்வோ தாழ்வோ வரட்டும் படிப்பால்
வாழ்நாள் வரைதுணை வருவது படிப்பே!

# தாம்பரத்தில் (ஸ்ரீ பத்மாவதி நகரில்)

## பிளாட்டின் விலை ரூ. 626 தான்

—மனையை பார்வையிட—

## ரவி & கோ.,

14-A, மகாலக்ஷ்மி தெரு, சென்னை-17 போன்: 442740

தினசரி காலை 7 மணியிலிருந்து பகல் 12 மணி வரை கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் எதிரில் உள்ள துர்க்கா கேண்டினிலிருந்து எங்கள் காரில் சென்று மனையை பார்வையிடலாம்.

*With the best compliments of*

## MANIAM STORES

Stationery & General Merchants

40/5, V. S. MUDALI STREET,
SAIDAPET :: MADRAS-15.

Phone: 811729

FOR BETTER BENEFITS

*Join*

"BEETA" Groups

# Beeta Finance Corporation

(CHIT PROMOTORS)

5/141, Mount Road, Madras-6

---

## நன்றி

இம் மலரை வெளியிடுகின்ற மாண்புமிகு நீதிபதி திரு. எம். எம் இஸ்மாயில் அவர்கள்

*

கவிதைகள் அனுப்பி உதவிய கவிஞர்கள்

*

விளம்பரம் தந்துள்ள பெருமக்கள்
விளம்பரம் சேகரித்து உதவியோர்

*

இம் மலரைக் குறித்த காலத்தில் அச்சிட்டு உதவிய சைதை கீதா அச்சகத்தார்

*

பாரதி பிளாக் உதவிய அமுத நிலையத்தின் நிர்வாகிகள் ஆகியோர்க்கு பாரதி கலைக் கழகத்தின் நன்றி உரியதாகும்

பாரதி கலைக் கழக செயற்குழு

## குழந்தை இலக்கியப் பணியில்

வெள்ளிவிழாக் கண்ட

# குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா

படைத்த சிறந்த நூல்கள் சில

மத்திய அரசினரின் பரிசு பெற்றவை

| | | |
|---|---|---|
| 1. | மலரும் உள்ளம் (முதல் தொகுதி) | 5—00 |
| 2. | பாட்டிலே காந்தி கதை | 3 - 00 |

தமிழ்நாடு அரசினர் பரிசு பெற்றவை

| | | |
|---|---|---|
| 1. | மலரும் உள்ளம் (முதல் தொகுதி | 5—00 |
| 2. | பெரியோர் வாழ்விலே | 1—26 |
| 3. | சின்னஞ்சிறு வயதிலே | 1—25 |
| 4. | பிள்ளைப் பருவத்திலே | 2—00 |
| 5. | பாப்பாவுக்குப்பாட்டு | 0—40 |

கிடைக்குமிடம் :

## பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை—1.

*With best compliments from:*

# V. G. PANNEERDAS & CO.,

SAIDAPET :: MADRAS-15

Phone: 442333

*Branch:*

T. NAGAR, MADRAS—17.

Phone: 440246

**VGP** Largest Sellers of Branded Articles.

உ

கவிஞர்களின் புகழ் ஓங்குக

# அமுத நிலையம் லிமிடெட்

1/45, இராயப்பேட்டை ஹைரோடு,

சென்னை-14.

டெலிபோன் : 82645 தபால்பெட்டி: 674

உ

கவிஞர்களுக்கு எம் நல் வாழ்த்துக்கள்

"அண்ணல் அமர்ந்த இடம் கோயிலாகும்
புண்ணியன் நடந்த நிலம் புனிதமாகும்"
— நேருஜி

# காந்தி வட்டம்,

(காந்திய மாத இதழ்)

காப்பாளர், ஆசிரியர்

கா. மகாலிங்கம். கே. ராமமூர்த்தி

காந்தி வட்டம்

9, கிருஷ்ணசாமி தெரு, அபிராமபுரம்,

சென்னை-18.

போன் : 75292

*With the best compliments from*

**The Southern Investments**

55, Montieth Road,

MADRAS—8.

Phone: 87239

# VASAN'S

REAL ESTATES – RENTALS

*GOVT. OF INDIA GAZETTED SPECIALIST VALUER*

**PHONE : 440999 — 444670**

"SRINIVAS"

1, CATHEDRAL GARDEN LANE,

(Behind Gemini)

**MADRAS - 34**

## Growing Faith

| | |
|---|---|
| 1969 | Rs. 18 Crores |
| 1968 | Rs 13·92 Crores |
| 1967 | Rs. 11·42 Crores |
| 1966 | Rs. 9.00 Crores |
| 1965 | Rs 4·97 Crores |
| 1964 | Rs. 3·15 Crores |

Sudarsan Chit Funds grow steadily year after year. The ever-growing number of subscribers proves it. This growing faith helps Sudarsan to extend its Savings Scheme to more people at more new places

# SUDARSAN CHIT FUNDS

A UNIT OF

**Sudarsan Trading Company Limited**

Registered Office CALICUT-2.

*Central Office*

SUDARSAN BUILDING.
Whites Road, Madras—14.

Aries

கீதா அச்சகம், சைதை, சென்னை-15, 443837